**செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்**

# தமிழிலக்கியத்தில் முத்தொள்ளாயிரம் பெறும் இடமும் முத்தொள்ளாயிர மரபும்

**இரா. சம்பத்**

துணைப்பேராசிரியர்

புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம்

புதுச்சேரி.

## முத்தொள்ளாயிரப் பாவியம்

சங்க காலம் முதல் இக்காலம் வரை தமிழ் மொழியில் ஏராளமான இலக்கியங்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் முத்தொள்ளாயிரம் அரிய கற்பைனைக் கருவூலமாகத் திகழ்கிறது. முவேந்தர்களைப் பற்றிய இரண்டாயிரத்து எழுநூறு பாடல்கள் (2700) பாடப்பட்டுத் தொகுக்கப்பெற்றிருக்கக்கூடும் என்பது இந்நூலின் பெயரைக் கொண்டு அறியப்படும் செய்தியாகும். எனினும் இன்று நமக்குக் கிடைப்பவை நூற்றொன்பது பாடல்கள் (109) மட்டுமே ஆகும்.

சங்க காலத்தில் இயற்றப்பட்ட பாடல்களைத் தொகுத்தோர் பாடப்பொருள் பற்றி அகப்பாடல், புறப்பாடல் என இருவகையாகப் பகுத்து தொகுத்தனர். முத்தொள்ளாயிரப் பாடல்கள் மேற்கூறப்பட்ட இருநிலைகளில் அமைந்துள்ளன. அகப்பாடல் முழுவதும் பெரும்பாலான பெண்பாற் கைக்கிளைப் பாட்டுக்களாக அமைந்துள்ளன. தலைவி, தாய், செவிலி, தோழி ஆகிய நான்கு வகையான அகமாந்தர்களும் கூற்று நிகழ்த்துகின்ற முறையில் முத்தொள்ளாயிரப் பாடல்கள் அமைந்திருக்கின்றன.

மன்னர்களுடைய நாடு, நகரம், யானை, மறம்,குதிரை மறம், வெற்றி, வீரம், கொடை, திறைப்பொருள் கொள்ளல், மன்னர்கள் பிறந்தநாள் விழா முதலியனவற்றைப் பாராட்டிப் புகழ்வனவாய் புறப்பாடல்கள் அமைந்துள்ளன.

## பழந்தமிழ் இலக்கியமும் தொல்காப்பியர் காலமும்

சங்கப் பாடல்களின் காலம் கி.மு. 200ஆம் ஆண்டு முதல் கி.பி. 250 ஆம் ஆண்டு வரையிலும் சங்க மருவிய காலம் கி.பி. 250ஆம் ஆண்டு முதல் கி.பி. 590 ஆம் ஆண்டு வரையிலும் அமையும் என்பார் சிவத்தம்பி. மேலும், சங்க மருவிய காலத்தை கி.பி. 250ஆம் ஆண்டு முதல் 460 ஆம் ஆண்டுவரை சங்க மருவிய முற்காலம் என்றும் கி.பி. 460 ஆம் ஆண்டு முதல் கி.பி. 590 ஆம் ஆண்டு வரை சங்க மருவிய பிற்காலம் என்றும் பாகுபாடு செய்வார். சங்க காலத்தில் குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, புறநானூறு ஆகியன இயற்றப்பட்டதாகவும், சங்க மருவிய முற்காலத்தில் திருக்குறள், தொல்காப்பியம், கலித்தொகை, பரிபாடல் ஆகியன இயற்றப்பட்டதாகவும் கூறுவர். கி.பி. 460ஆம் ஆண்டு முதல் கி.பி. 590ஆம் ஆண்டு வரை சங்க மருவிய பிற்காலம் என்றும், இக்காலத்தில் சிலப்பதிகாரம், மணிமேகலை, முத்தொள்ளாயிரம், சிறுபஞ்சமூலம், ஏலாதி, நான்மணிக்கடிகை, கார்நாற்பது, களவழிநாற்பது, ஆசாரக்கோவை போன்ற நூல்கள் இயற்றப்பட்டதாகக் கொள்ளலாம். இவ்வாறு இலக்கியங்களைக் காலநோக்கில் வைத்து நோக்கும்பொழுது யாப்பு மரபிலும் பாடுபொருள் மரபிலும் இயற்றும் முறைமையிலும் பாடல்கள் வேறுபடுவதைக் காணலாம்.

சங்க இலக்கிய யாப்பியல் மரபினின்று சங்க மருவிய பிற்கால இலக்கியமான முத்தொள்ளாயிரம் பா, பாடுபொருள் வகையில் மாறுபட்டு அமைந்துள்ளது. இம்மாற்றங்களைப் பார்ப்பதற்கு முன்பு மரபு, மரூஉ, மரபுமாற்றம் ஆகியன குறித்துக் காணலாம்.

## மரபு

இடத்தையும் காலத்தையும் அடிப்படையாகக் கொண்டு மனிதச் செயற்பாடு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. ஒரு குறிப்பிட்ட காலத்தையும் இடத்தையும் அடிப்படையாகக் கொண்டு நிகழ்ந்த மனித செயற்பாடு கால இயக்கத்தின்போது மாறாது தொடர்ந்து செல்லுதலும் உண்டு. சிறுசிறு மாற்றங்களும் தொடர்தலும் உண்டு. குறிப்பிட்ட காலமும் இடமும் அல்லது இரண்டில் ஏதேனும் ஒன்று பற்றி வேறுபாடமைந்து தொடர்தலும் உண்டு. பெரும்பான்மையும் மாறாது தொடர்தலை மரபு என்கிறோம்.

## மரூஉ

மனித செயற்பாடு கால இடத்திற்கேற்ப சிறுசிறு வேறுபாடுகளுடன் தொடர்தலை மரூஉ என்கிறோம்.

## மரபு மாற்றம்

மனிதச் செயற்பாடு கால நிரலான தொடர்ச்சியைக் கொண்டது. இச்செயற்பாட்டில் அடிப்படை வேறுபாடுகளால் வேறுபடத் தொடர்தலை மரபு மாற்றம் என்கிறோம். மரபு, மரூஉ, மரபு மாற்றம் ஆகியவற்றின் அடிப்படையில் முத்தொள்ளாயிரம் நோக்கப்படுகின்றது.

## யாப்பு

சங்க காலத்தில் இயற்றப்பட்ட பாடல்களின் பாடுபொருள் அகம், புறம் என இருபெரும் பிரிவுகளாகப் பாகுபடுத்தப்பட்டது. சங்க இலக்கியத் தொகைநூல்களில் இடம்பெற்றுள்ள பாக்க ளுள் இரண்டாயிரத்து நூற்று எண்பத்தெட்டுப் பாடல்கள் (2188) ஆசிரியப்பாக்களாக அமைந்துள்ளன. வஞ்சிப்பா மிகமிக அருகியே உள்ளது. கலிப்பா நூற்றுஅய்ம்பது (150) பாடல்கள் ஆகும். சங்க இலக்கியத்தில் தனிப்பட்ட வெண்பாக்கள் இல்லை. கலிப்பாவின் உறுப்புக்களாகிய வெண்பாக்களே உள்ளன. கலிப்பாடல்களில் வெண்பாக்களின் ஆட்சி இருவகையில் மேலோங்கி நிற்றல் தெளியப்படும். தரவு, இடைநிலைப்பாடு, கொச்சகம், சுரிதகம் ஓரடியான் ஒன்று, சொற்சீரடி முதலிய பகுதிகள் வெண்பாக்களினாலும் வெள்ளடிகளினாலும் பெற்றுவந்த கலிப்பாக்கள் ஒருபுறம்

உள்ளன. முழுவதுமே வெண்பாக்களினால் அமைந்த கலிப்பாடல்கள் மற்றொரு புறம் காணப்படுகின்றன என்னும் கூற்றினை மேற்கூறிய கருத்தினோடு ஒப்பிட்டு நோக்கலாம் (சோ.ந.கந்தசாமி. 1989 : 632). மருட்பா வகை சங்ககால தொகைநூல்களில் இடம்பெறவில்லை. பரிபாடல் வெண்பாவும் ஆசிரியப்பாவும் சார்ந்த கலப்புப் பாவாகும். பரிபாடல் நூலில் இருபத்துநான்கு (24) பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

தொல்காப்பியர் அகப்பொருளைப் பாடுவதற்குச் சிறப்புடைய யாப்பு வடிவங்களாக, கலிப்பாவினையும் பரிபாடலையும் குறிப்பிடுவார். ஆனால், சங்ககால அகப்பொருள் நேரிசை ஆசிரிய யாப்பில் மிகுதியாக இயற்றியிருத்தல் நோக்கத்தக்கது. அகப்பொருள் மட்டுமின்றி புறப்பொருள் பற்றிப் பாடுவதற்கும் ஆசிரிய யாப்பினைப் பயன்படுத்தியிருப்பது தொல்காப்பியரின் யாப்பிலக்கிய மரபு நெகிழ்ந்து புதிய இலக்கிய மரபு தோன்றியதே இதற்குக் காரணம் எனலாம்.

**சங்க இலக்கியச் சீரமைப்பு**

சங்க இலக்கியப் பாடல்களில் ஈரசைச்சீர்கள் மிகப் பெருவாரியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. மாச்சீர்களும் விளச்சீர்களும் கலந்து வரக்கூடிய ஈரசைச்சீர்கள் தொண்ணூறு (90 %) விழுக்காட்டிற்கும் மேலாக சங்க இலக்கியப் பாடல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஈரசைச்சீர்களில் மாச்சீர்கள் அய்ம்பத்தைந்து (55%) விழுக்காடு அளவிற்குப் பயன்படுத்தப்பட்டு இருப்பதையும் அவற்றிலும் தேமாவே ஏறக்குறைய முப்பது (30 %) விழுக்காடு அளவிற்குப் பயன்படுத்தப்பட்டிருப்பதையும் காணலாம். சங்க இலக்கியங்களில் இடம்பெறும் சீர்களைப் பற்றிப் பின்வரும் அட்டவணையில் காணலாம்.

**சங்க இலக்கிய கால யாப்பியல் மரபில் இயற்சீர்**

| சீர் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை | புறம் |
|---|---|---|---|---|---|---|
| தேமா | 32.3 | 28.3 | 28.4 | 32.7 | 30.8 | 33.4 |
| புளிமா | 24.9 | 25.7 | 28.3 | 29.1 | 27.5 | 23.7 |
| கூவிளம் | 17.6 | 20.6 | 19.0 | 19.0 | 18.5 | 16.0 |
| கருவிளம் | 18.0 | 17.5 | 17.9 | 17.9 | 16.7 | 14.0 |
| மொத்தம் | 92.8 | 92.1 | 93.6 | 93.7 | 93.5 | 88.1 |

ஆசிரியப்பாவின் இலக்கணம் மிகவும் நெகிழ்வுடையது. பெரும்பாலும் இயற்சீர்களையும் ஆசிரியத்தளைகளையும் பெற்று வரக்கூடியவை. எனினும் மற்ற சீர்களும் தளைகளும் வருவதற்குப் பெரும்பாலும் தடைகளில்லை. மேற்கூறிய அட்டவணையின் மூலம் சங்கப் பாடல்களில் தொண்ணூற்று மூன்று (93%) விழுக்காடு அளவிற்கு இயலசை மயங்கிய இயற்சீர்கள் பயன்படுத்தப்பட்டு இருப்பதைக் காணலாம்.

இவற்றுள் மாச்சீரில் அமையக்கூடிய சீர்களின் விழுக்காடு அய்ம்பத்தி ஏழாகும். விளச்சீரில் அமையக்கூடிய சீர்களின் விழுக்காடு முப்பத்தேழாகும் (37%). சங்க இலக்கிய ஆசிரியப்பாக்களில் அமைந்துள்ள மாச்சீரில் (57 %) முப்பத்து மூன்று (33 %) விழுக்காடு தேமாச்சீராக அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. விளச்சீர்கள் மாச்சீரைவிட சங்க இலக்கியத்தில் குறைவாகவே இடம்பெற்றுள்ளது.

**சங்க இலக்கிய கால யாப்பியல் மரபில் தளைக்கட்டு**

| தளை | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை | புறம் |
|---|---|---|---|---|---|---|
| நேர் ஒன்று ஆசிரிய தளை | 34.2 | 34.6 | 32.7 | 35.7 | 34.9 | 35.7 |
| நிரை ஒன்று ஆசிரியதளை | 20.3 | 22.3 | 22.3 | 18.3 | 20.1 | 16.4 |
| மொத்தம் | 54.5 | 56.9 | 54.9 | 54.0 | 55.0 | 52.1 |
| இயற்சீர் வெண்டளை | 38.3 | 35.4 | 38.7 | 39.6 | 38.7 | 35.3 |
| வெண்சீர் வெண்டளை | 3.3 | 2.5 | 2.7 | 3.0 | 2.9 | 5.7 |
| கலித்தளை | 3.7 | 4.5 | 3.6 | 3.3 | 3.1 | 4.7 |
| வஞ்சித்தளை | 0.2 | 0.7 | 9.1 | 0.1 | 0.3 | 2.2 |

சீர்களில் அமைந்தவாறே தளைகளின் பயன்பாட்டிலும் ஒரு சீரான அமைப்பு உள்ளதை மேலே காட்டப்பட்ட அட்டவணையில் காணலாம். இயற்சீர்களின் பயன்பாடு மிக்குள்ளதால், ஆசிரியத்தளைகளும் இயற்சீர் வெண்டளையுமே பெரும்பாலும் தளைக்கட்டுகளாக அமைந்திருப்பதையும் காண்கிறோம். எனவே, ஆசிரியப்பாக்களின் இலக்கணம் மிகவும் நெகிழ்வுடையதாக இருப்பினும், அவ்வகைப்பாக்கள் மிகுந்த கட்டுக்கோப்புடையவை என்று இதன்மூலம் தெரிய வருகிறது.

**சங்க இலக்கிய கால யாப்பியல் மரபில் காய்ச்சீர்**

| சீர் | குறிஞ்சி | முல்லை | மருதம் | நெய்தல் | பாலை | புறம் |
|---|---|---|---|---|---|---|
| தேமாங்காய் | 1.9 | 1.0 | 1.4 | 2.1 | 1.8 | 3.1 |
| புளிமாங்காய் | 1.7 | 0.7 | 1.6 | 1.3 | 1.2 | 2.3 |
| கூவிளங்காய் | 1.6 | 3.0 | 1.6 | 1.9 | 1.9 | 2.6 |
| கருவிளங்காய் | 1.6 | 2.3 | 1.7 | 0.9 | 1.0 | 1.9 |
| பிற | 0.4 | 0.9 | 0.1 | 0.7 | 0.7 | 2.0 |

சங்க இலக்கியத் தொகைநூல்களில் இடம்பெற்றுள்ள பாக்களில் எட்டு (8%) விழுக்காடு அளவிற்கு மிக குறைந்த அளவே காய்ச்சீர்கள் பயன்படுத்தப்பட்டு உள்ளன. சங்ககாலப் புலவர்களின் பாடுபொருள், துறை, பாடுகளன் ஆகியவற்றிற்கேற்ப மாறுபடல் இவற்றின் பயன்பாட்டில் ஏறக்குறைய ஒரு சீரான தன்மை அமைந்துள்ளது.

**சங்க மருவிய கால யாப்பியல் மரபு**

சங்க காலத்திற்குப் பின்னர்த் தோன்றிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பெரும்பாலானவை வெண்பா யாப்பில் இயன்றுள்ளன. இத்தொகுப்பில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை (திருக்குறள் தவிர்த்து) ஆயிரத்து தொள்ளாயிரத்து பதினெட்டு (1918) ஆகும். இவற்றுள் குறள்வெண்பா ஒன்று(1). சிந்தியல் வெண்பா அய்ம்பத்து மூன்று (53). நேரிசை வெண்பா ஆயிரத்து அறுபத்தேழு (1067). இன்னிசை வெண்பா அறுநூற்று அறுபத்தாறு (666). பஃறொடை வெண்பா முப்பத்தொன்று (31). குறள்வெண்பாவின் இனமாகிய வெண்செந்துறை நூறு (100) ஆகியனவாகும்.

**மரூஉம் மரபு மாற்றமும்**

தமிழ்ச் செய்யுளின் வளர்ச்சிப் படிநிலைகளைக் கவனித்தால் கி.பி. இருநூற்று அய்ம்பதாம் ஆண்டு (கி.பி. 250) சங்க மரபிற்கும் சங்க மருவிய மரபிற்கும் ஒரு பிரிகோடாகவே வருகின்றது. தொல்காப்பியர் தனக்கு முன்பு நிலவிய சங்க மரபினைத் தொகுத்து வகுத்து தருகின்றார். கி.பி. இருநூற்று அய்ம்பதாம் ஆண்டிலிருந்து காணப்படும் செய்யுளாக்கங்களைப் பார்க்கும்பொழுது பின்வரும் மரபு மாற்றங்களையும் மரூஉவையும் காணலாம்.

1. திருக்குறள், நாலடியார், ஏலாதி, சிறுபஞ்சமூலம் போன்ற அறநூல்கள் சுட்டும் அறப்போதனை மரபு
2. அக இலக்கியங்களும் புற இலக்கியங்களும் சமுதாயத்தின் உண்மை வழக்கினைப் பிரதிபலிப்பதிலும் ஓர் இலக்கிய மரபாகவே போற்றப்படுகின்ற புதிய படைப்பாக்கமுறை.
3. பத்துப்பாட்டினைத் தொடர்ந்து வரும் சிலப்பதிகாரம், மணிமேகலை சுட்டும் தொடர்நிலைச் செய்யுள் மரபு.

4. முத்தொள்ளாயிரம் சுட்டும் அரசவை இலக்கிய மரபு அக-புறப்பாடல் மரபின் புதிய போக்கு.

## சங்க மருவிய காலத்தின் புதியபோக்கு

இயல் இசை நாடகம் ஆகிய மூன்றும் இணைந்த மரபே சங்க இலக்கிய மரபாகும். இம்மரபு சங்க மருவிய காலத்தில் மாறத் தொடங்கியது. இசையும் ஆடலும் இயலும் (இலக்கியம்) ஒன்றாக நின்ற நிலை போய் இசைக்குரிய பாட்டு மரபு வேறு, நாடகத்துக்குரிய பாட்டு மரபு வேறு, இயலுக்குரிய பாட்டு மரபு வேறு என்று தனித்தனியே தமிழ் ஆக்கங்களை வகுத்துப் பார்க்கும் மரபு ஒன்று வளரத் தொடங்குகிறது. சமண பௌத்த செல்வாக்குகள் காரணமாக இசைமரபும் ஆட்ட மரபும் தனித்தனியே போக இலக்கிய மரபு என்பது புலவர்களுக்குரிய ஒன்றாக வரையறுக்கப்படுகிறது. இதற்கான பிரதான கா ரணம் அக்காலத்திலே புலமை என்பது சமண பௌத்த சங்கங்களை மையமிட்டு நின்றதுவேயாகும் என்பர் சிவத்தம்பி (2007 : 64). இலக்கியம் இசை, நாடகம் என்ற மூன்று நிலைகளையும் தனித்தனியே பார்க்கும் பார்வை சங்க இலக்கிய காலத்தில் தோன்றவில்லை. சங்க மருவிய காலத்தில் நிலைமை மாறுகிறது. சங்க மருவிய காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் சமண பௌத்த செல்வாக்கு வளர்ச்சியுடன் தொடர்புடையதாக இருக்கிறது. புலவர்கள் என்போர் பாணர் மரபிலிருந்து வேறுபட்டவர்களாக வளர்ந்து வந்தனர். புலவர் மரபுக்கு முறையான எழுத்து, கல்வி அறிவு அடிப்படையாக அமைகிறது. புலவன் – அறிஞன் என்ற இந்தச் சமன்பாடு வளர்வதற்கான சமண பௌத்த மதச்சூழல் தமிழ்நாட்டில் ஏற்படுகின்றது. இந்த இரண்டு மதங்களிலும் துறவிகள் குழுமம் குழுமங்களாகவே இருப்பர். பௌத்த பிக்குகளின் தொகுதி நிலைக்குப் பெயர் சங்கம் என்பதாகும்.

## அறப்போதனை மரபும் வெண்பா யாப்பும்

பௌத்த சமண சமயத்தைச் சார்ந்தவர்கள் தமிழ்நாட்டில் கி.பி. இருநூற்று அய்ம்பதாம் ஆண்டு முதலே தங்கள் ஆதிக்கத்தினை நிலைநாட்டினர். அவர்கள் தங்கள் மதம் தொடர்பான கொள்கை கோட்பாடுகளை மக்களுக்குப் போதிக்கும் மரபு படிப்படியாக வளர்கிறது. இந்த அறப்போதனைப் பாரம்பரியம் ஒரு

இலக்கியப் படைப்பாக்கமாகவே வளர்க்கப்படுவதையும் காணமுடிகிறது. சங்க மரபிலும் இப்படியொரு அறம் கூறும் மரபு இருந்திருக்கிறது. புறநானூற்றிலே வரும் அறம் பாடிற்றே ஆயிழை கணவ எனவரும் பாடல்அடி இதற்குச் சான்றாகும். ஆனால், சங்க மருவிய கால நூல்களில் இடம்பெறுகின்ற அறம் பற்றிய செய்திகள் அப்படியானவை அன்று. அவை மக்களுக்கு எடுத்துச் சொல்லப்படுகின்ற அறக்கருத்துக்களே. வாழ்க்கையில் இந்த நெறிகளை இந்தக் காரணங்களுக்காக மேற்கொள்ளுங்கள் என்று மக்களை நோக்கி கூறுகின்ற அறப்போதனைகளாகும். திருக்குறள், நாலாடியார், இன்னாநாற்பது, இனியவை நாற்பது, சிறுபஞ்சமூலம், ஏலாதி, திரிகடுகம், நான்மணிக்கடிகை, ஆசாரக்கோவை ஆகிய அறநூல்களின் அமைப்பினையும் எடுத்துக்கூறல் முறைமையினையும் பார்க்கும்பொழுது மக்களுக்குப் போதிக்கப்படும் முறைமையிலேயே இந்நூல்கள் அமைந்துள்ளன. அறம் பற்றிய விளக்கம் இந்நூல்களில் இல்லை. சங்க மருவிய நூல்களில் முக்கியமானதாக இடம்பெறும் கொல்லாமை, புலால்மறுத்தல் போன்றவை சங்க நூல்களில் இடம்பெறவில்லை. சங்கப் பண்பாட்டு நெறிகளிலிருந்து மாறிய புதிய சமூகம் ஒன்றிற்கு எடுத்துக் கூறுவனவாகவே அறநூல்கள் அமைகின்றன.

சங்க கால யாப்பியல் மரபு காலப்போக்கில் மாற்றம் அடையத் தொடங்கியது. சங்க மருவிய காலத்தில் இயற்றப்பட்ட சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் இடம்பெற்றுள்ள ஆசிரியப்பாவில் இம்மாற்றத்தினைக் காணலாம். சங்க கால தொகைநூல்களில் காணப்படும் கருத்து செறிவில் மட்டுமின்றி, அவற்றின் யாப்புக் கட்டுக்கோப்பிலும் யாப்பியல் நெகிழ்வு காலப்போக்கில் ஏற்பட்டுள்ளது என்பதனை பின்வரும் புள்ளிவிவர அட்டவணை மூலம் அறிந்துகொள்ளலாம்.

**சங்க மருவிய கால ஆசிரியப்பா யாப்பியல் மரபில் இயற்சீர்**

| சீர் வாய்பாடு | சிலப்பதிகாரம் | மணிமேகலை |
|---|---|---|
| தேமா | 26.6 | 28.2 |
| புளிமா | 23.3 | 21.2 |
| கூவிளம் | 24.2 | 28.1 |
| கருவிளம் | 18.8 | 16.5 |
| மொத்தம் | 92.9 | 94.0 |

**சங்க மருவிய கால யாப்பியல் மரபில் காய்ச்சீர்**

| சீர் வாய்பாடு | சிலப்பதிகாரம் | மணிமேகலை |
|---|---|---|
| தேமாங்காய் | 2.7 | 2.7 |
| புளிமாங்காய் | 2.3 | 1.9 |
| கூவிளங்காய் | 1.0 | 0.7 |
| கருவிளங்காள் | 1.1 | 0.7 |
| மொத்தம் | 7.1 | 6.0 |

**சங்க மருவிய கால யாப்பியல் மரபில் தளைக்கட்டு**

| தளை | சிலப்பதிகாரம் | மணிமேகலை |
|---|---|---|
| நேர் ஒன்றிய ஆசிரியத்ளை | 28.2 | 28.8 |
| நிரை ஒன்றிய ஆசிரியத்தளை | 19.9 | 17.5 |
| இயற்சீர் வெண்டளை | 44.6 | 47.8 |
| வெண்சீர் வெண்டளை | 3.3 | 3.5 |
| கலித்தளை | 3.5 | 2.2 |
| வஞ்சித்தளை | 0.5 | 0.2 |

சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களில் காணப்படும் சீர்களின் அமைப்பு, சங்க கால ஆசிரியப்பாக்களிலுள்ள அமைப்பினைப் போன்றே இருப்பினும் தளைகளின் அமைப்பில் வெண்பாவிற்குரிய வெண்டளை

ஆசிரியப்பாக்களில் மிகுந்து வந்துள்ளதைக் காணலாம். சங்க கால யாப்பியல் மரபில் பெரிதும் வழக்கிலிருந்த ஆசிரியப்பா வகை வழக்கிழந்து சங்க மருவிய கால நூற்களில் வெண்பாக்கள் தலையெடுக்கத் தொடங்கியப் போக்கினையே இது காட்டுகிறது எனலாம்.

## வெண்பா

இயற்சீரும் காய்ச்சீரும் வெண்பாவில் இடம்பெறும். இந்த எட்டுவகையான சீர்கள் வெண்பாவில் இடம்பெற்றாலும் வெண்பாவுக்குரிய தளைக்கட்டுப்பாடுகள் மிகவும் இறுக்கமானவை. எனவே, வெண்பாவின் முதலடி முதற்சீரைப் பொறுத்தே மற்ற சீர்கள் அமையப்பெறும். இதன்காரணமாக வெண்பா அமைப்புக்களும் ஒவ்வொரு விதமாக அமைகின்றன.

## வெண்பாவின் தோற்றம்

இனக்குழு சமூகத்தில் நிகழ்த்தப்பட்ட கூத்துமரபு பாடலிலிருந்து வெண்பா தோன்றுவதற்கு வாய்ப்பில்லை. ஆசிரியப்பாவின் அகவல் ஓசைக்கு நேர் எதிர்மாறான, செப்பலோசையைக் கொண்டதாக வெண்பா அமைகிறது. எனவே, யாப்பில் தளைக்கோட்பாடும் பாடுபொருளில் அறநெறியும் தோன்றிய காலத்தில் வெண்பா யாப்பு புலவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட வடிவம் ஆகும்.

சங்க மருவிய காலத்தில் இயற்றப்பட்ட திருக்குறள், நாலடியார், முத்தொள்ளாயிரம் ஆகிய நூல்களில் இடம்பெற்றுள்ள சீர்களும் தளைகளும் அமைந்திருக்கும் முறையைப் பின்வரும் புள்ளிவிவர அட்டவணைத் தெளிவுப்படுத்தும்.

**சங்க மருவிய கால வெண்பா யாப்பியல் மரபில் இயற்சீர் அமைப்பு**

| சீர் வாய்பாடு | குறள் | நாலடியார் | முத்தொள்ளாயிரம் |
|---|---|---|---|
| தேமா | 29.7 | 27.4 | 26.5 |
| புளிமா | 13.3 | 17.7 | 10.1 |
| கூவிளம் | 12.0 | 12.6 | 11.0 |
| கருவிளம் | 8.6 | 10.3 | 7.4 |
| மொத்தம் | 63.6 | 68.0 | 65.4 |

**சங்க மருவிய கால வெண்பா யாப்பியல் மரபில் காய்ச்சீர் அமைப்பு**

| சீர் வாய்பாடு | குறள் | நாலடியார் | முத்தொள்ளாயிரம் |
|---|---|---|---|
| தேமாங்காய் | 14.9 | 11.3 | 14.3 |
| புளிமாங்காய் | 12.5 | 9.0 | 9.7 |
| கூவிளங்காய் | 3.6 | 4.7 | 11.9 |
| கருவிளங்காய் | 5.4 | 7.0 | 8.7 |
| மொத்தம் | 36.4 | 32.0 | 44.6 |

**சங்க மருவிய கால வெண்பா யாப்பியல் மரபில் ஓரசைச்சீர் அமைப்பு**

| சீர் வாய்பாடு | குறள் | நாலடியார் | முத்தொள்ளாயிரம் |
|---|---|---|---|
| நாள் | 13.1 | 17.4 | 14.0 |
| காசு | 15.0 | 15.2 | 26.0 |
| மலர் | 50.0 | 39.1 | 40.0 |
| பிறப்பு | 21.9 | 28.3 | 20.0 |

**சங்க மருவிய கால வெண்பா யாப்பியல் மரபில் தளைக்கட்டு**

| சீர் வாய்பாடு | குறள் | நாலடியார் | முத்தொள்ளாயிரம் |
|---|---|---|---|
| இயற்சீர் வெண்டளை | 63.6 | 68.0 | 55.4 |
| வெண்சீர் வெணடளை | 36.4 | 32.0 | 44.6 |

சங்க மருவிய கால வெண்பாக்களில் இயற்சீர்கள் மிகுதியாகப் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. எனினும் விளச்சீர்கள் ஆசிரியப்பாவைக் காட்டிலும் வெண்பாக்களில் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இவற்றிலும் கருவிளம் மிகக் குறைவாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆசிரியப்பாக்களில் அமைந்து இருப்பதைக் காட்டிலும் வெண்பாக்களில் காய்ச்சீர்கள் மிகுந்து வருவதைக் காணலாம். காலப்போக்கில் காய்ச்சீர்கள் மிகுதியாகப் பயன்படும் போக்கு ஆசிரியப்பாக்களில் காணப்படுவதைப் போலவே வெண்பாக்களிலும் அமைந்துள்ளதைக் காணலாம்.

## புறப்பொருளும் பாவகையும்

பதினெண்கீழ்க் கணக்கில் இடம்பெறும் அறநூல்கள் அனைத்தும் அறம் பொருள் இன்பம் ஆகிய மூன்று பிரிவுகளில் மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான அறிநெறிகளை இயம்புகின்றன.

சங்ககால மரபில் ஆசிரியப்பாவும், கலிப்பாவும் முதன்மை பெற்றன. சங்க மருவிய கால இலக்கிய மரபில் வெண்பா யாப்பு முதன்மை பெற்றது. ஆசிரியப்பாவின் ஓசை அகவலோசையாகும். ஒருவரை அழைத்துக் கூறும் அல்லது விவரித்துக் கூறும் இயல்பு அகவல் ஓசைக்கு முதன்மையானது. சற்று தூரத்தில் உள்ள ஒருவரது கவனத்தை ஈர்த்துப் பாடுவதற்குரிய ஓசைதான் அகவல் ஓசை. ஆனால், சங்க மருவிய காலத்தில் செப்பல் ஓசையை உடைய வெண்பாவைப் புலவர்கள் பயன்படுத்தினர். செப்புதல் என்பது கூறுதல் என்பதாகும். எதுவும் அறிந்திராத ஒருவருக்கு ஒன்றை எடுத்துக்கூறல் என்னும் பொருளை உடையதாக செப்புதல் என்பது அமைந்துள்ளது, மேலும், தனக்கு அருகிலே இருக்கும்

ஒருவருக்கு எடுத்துக் கூறுவதாகவும் இச்சொல் அமையும். எனவே வகுப்பொன்றுக்குப் பாடம் சொல்லப்படும் முறைமையிலே செப்பலோசை அமைந்துள்ளதை அறியலாம். சமணம், பௌத்தம் ஆகிய இரண்டு சமயங்களும் தர்ம உபதேச முறைமையைக் கடைபிடிப்பவை. இந்தப் பணியைச் சமண முனிவர்களும் பௌத்த பிக்குகளும் செய்வார்கள். இவர்கள் உரையாற்றும் தர்ம உபதேச உரை நாடக பாணியாக அமையாது. மாறாக நேரடியாகச் சொல்லும் முறைமையில்தான் இருக்கும். இம்முறைமைக்கு வெண்பா யாப்பு வடிவம் பொருத்தமான ஒன்றாகும். நெடும்வெண்பாவைவிட குறுவெண்பாட்டு செறிவான வடிவமாகும். திருக்குறளின் தன்மை, நோக்கம், அதற்கான கேட்போர் வட்டம் ஆகியவற்றை மனங்கொண்டு பார்த்தால் திருக்குறள் முழுமையும் புலமை நிலைப்பட்டது எனலாம். அகப்புறப்பாடல் மரபைத் தொடர்ந்து நீதிப்பாடல் மரபும் தோன்றியது. சங்ககாலப் பாடல் மரபில் அறக்கருத்துக்களை அகவலோசை முறையிலே சொல்லப்பட்டது. இம்மரபு முற்றாக மாற்றப்பட்டு சங்க மருவிய காலத்தில் அறநெறிகள் செப்பலோசையைச் சார்ந்தே உரைக்கப்பட்டது. குறள்வெண்பா, சிந்தியல் வெண்பா, அளவியல் வெண்பா, பஃறொடை வெண்பா ஆகிய வெண்பாக்கள் புறப்பொருளை இயற்றப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

## அளவியல் வெண்பா

வெண்பாவின் இலக்கணம் பெற்ற நான்கடியில் வருவது அளவியல் வெண்பாவாகும். இது நேரிசை அளவியல் வெண்பா, இன்னிசை அளவியல் வெண்பா என இரண்டு வகைப்படும்.

| அளவியல் வெண்பா | நேரிசை அளவியல் | இன்னிசை அளவியல் |
| --- | --- | --- |
| 1300 | 820 | 480 |

தக்காரும் தக்கவர் அல்லாரும் தந்நீர்மை
எக்காலும் குன்றல் இலராவர் – அக்காரம்
யாவரே தின்னினும் கையாதாம் கைக்குமாம்
தேவரே தின்னினும் வேம்பு (நாலடியார். 112)

இப்பாடல் நேரிசை அளவியல் வெண்பா யாப்பிற்குச் சான்றாகும். இப்பாவகையே அறநெறிக் காலத்தில் மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**சங்க மருவிய கால அக இலக்கியங்கள்**

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டனுள் திருக்குறள் நாலடியார் இரண்டும் உறுதிப்பொருள்களுள் ஒன்றாக ஒரு சிறுகூறாக (திருக்குறள் 250 /1330, நாலடியார் 20/400) இன்பம் என்னும் பெயரில் அகப்பொருளை எடுத்துக் கூறுகின்றன. ஆனால், திணைமாலை நூற்றைம்பது, ஐந்திணை எழுபது, ஐந்திணை ஐம்பது, திணைமொழி ஐம்பது, கைந்நிலை, கார்நாற்பது ஆகிய ஆறு நூல்களும் தனித்தனியே அகப்பொருள் பற்றி மட்டுமே பாடுகின்றன. அகப்பொருள் பற்றிப் பாடுவதற்கு நானூற்று இருபத்தொன்பது (429), அளவியல் வெண்பாக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் இருநூற்று அய்ம்பத்தேழு பாடல்கள் (257), நேரிசை அளவியல் வெண்பாக்களாகவும் நூற்று எழுபத்திரண்டு (172) பாடல்கள் இன்னிசை அளவியல் வெண்பாக்களாகவும் அமைந்துள்ளன.

பிரிந்தவர் மேனிபோல் புல்லென்ற வள்ளி
பொருந்தினர் மேனிபோல் பொற்பத் – திருந்திழாய்
வானம் பொழியவும் வாரார்கொல் இன்னாத
கானம் கடந்துசென் றார் (ஐந்திணை ஐம்பது. 8)

தோழிக்கூற்றாக அமையும் இப்பாடல் நேரிசை அளவியல் வெண்பா யாப்பிற்குச் சான்றாகும். சங்க காலத்தில் முதன்மையான இடத்தைப் பெற்றிருந்த அகப்பொருள்

சங்க மருவிய காலத்தில் இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டது. இரண்டாம் நிலையை அடைந்த இப்பாடுபொருள் அறநெறிக்காலத்தில் மிகுதியான அளவில் பயன்படுத்தப்பட்ட நேரிசை அளவியல் வெண்பா யாப்பிலே இயற்றப்பட்டுள்ளது.

## பொருள் தொடர்நிலைச்செய்யுள்

சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் கவிதைகள் பாடல் அலகுகள் ஒவ்வொன்றும் தனித்தனி நிகழ்வுகளாக உள்ளன. சங்க இலக்கிய மரபின் தாக்கத்தால் இளங்கோவடிகள் தனித்தனி நிகழ்வுகளாக உள்ள அலகுகளை ஒரு தொடர்நிலையில் கூறிச் செல்கிறார். ஏற்கனவே நிலவிய ஒரு கதைப்பாடல் மரபைத் தன் எடுத்துரைப்புக்கு இளங்கோவடிகள் பயன்படுத்தும்போது ஆசிரியப்பாவை மிகுதியாகப் பயன்படுத்துகிறார். சங்க மரபில் பயன்படுத்திய நேரிசை ஆசிரியப்பாவைத் தவிர்த்து நிலைமண்டில ஆசிரியப்பாவைப் பயன்படுத்துகிறார். கதையைக் கூறுவதற்கும் சம்பவத்தினைச் சித்தரிப்பதற்கும் விவரங்களைக் கூறிச் செல்வதற்கும் நிலைமண்டில ஆசிரியப்பாவினை இளங்கோவடிகள் கையாண்டிருக்கின்றார்.

## அக – புறப்பாடல் மரபின் புதிய வளர்ச்சி

முத்தொள்ளாயிரம் பாடல்களைத் தனிநூலாக முதன்முதலில் பதிப்பித்தவர் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பெரும் புலவராக வீற்றிருந்த ரா.ராகவையங்கார்; 1905ஆம் ஆண்டு இப்பதிப்பு வெளிவந்தது. பின்னர் 1935ஆம் ஆண்டில் இரண்டாம் பதிப்பாக முத்தொள்ளாயிரம் வெளியிடப்பெற்றது. முத்தொள்ளாயிரத்தில் இன்று இடம்பெற்றுள்ள நூற்றெட்டு (108) பாடல்களும் புறத்திரட்டு நூலில் இடம்பெற்றிருந்தன.

## நேரிசை வெண்பா

குறள்வெண்பா, சிந்தியல்வெண்பா, அளவியல் வெண்பா, சவலை வெண்பா, பின்முடுகு வெண்பா, பஃறொடை வெண்பா, கலிவெண்பா ஆகியன வெண்பா யாப்பின் வகைகளாகும். இதனை இலக்கிய இலக்கணங்கள் எடுத்துக்காட்டுகின்றன. முதலிரு அடிகளின் எதுகையை இரண்டாம் அடிகளின் நான்காம்சீர் ஏற்று அமையும். தனிச்சொல் / தனிச்சீர் அமைப்பு வெண்பாவின் வகைகளையெல்லாம் நேரிசை வகையாக்குகின்றது. குறள்முதல் கலிவெண்பா ஈறான அனைத்து வெண்பா வகைகளிலும் நேரிசையமைப்பு இருப்பினும் அளவியல் வெண்பாவின் – நான்கடி வெண்பாவின் நேரிசையமைப்பு மட்டும் விதந்து சிறப்பிக்கப்பட்டு நேரிசை வெண்பா என்றே வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. தனிச்சீர் பயிலாத வெண்பா வகைகள் இன்னிசை வகைமையாக வழங்குகின்றன. அனைத்து வெண்பா வகையிலும் நேரிசை, இன்னிசை அமைப்பு இருப்பினும் நான்கடி வெண்பாக்களே நேரிசை வெண்பா இன்னிசை வெண்பா எனத் தனிப்படக் காலங்காலமாய் வழங்கப்பெற்று வருகின்றன.

குறள்வெண்பா முதலாகக் கலிவெண்பா ஈறாக வெண்பா வகைகள் பல இருப்பினும் வெண்பா என்று பொதுப்படச் சுட்டினாலே அது நேரிசை வெண்பாவையே உணர்த்தும் அளவிற்கு நேரிசை வெண்பா அமைப்பு பெருவழக்கம் ஆட்சியும் செலுத்தி வந்துள்ளது.

## வெண்பாவின் இலக்கணம்

இயற்சீர், வெண்சீர் வெண்டளைகள் பயிலுதல், கனிச்சீர்கள் விரவாமை, அடிதோறும் நான்குசீர்கள் பெறுதல், ஈற்றடி மூன்றுசீர்களால் அமைதல் ஈற்றடி ஈற்றுச்சீர் ஓரசைச்சீர்களாய் அமைதல், இரண்டாம் அடிகளின் நான்காம் சீர்கள்

ஒரூஉ எதுகை பெற்று நேரிசை அமைப்பாக விளங்கல் ஈரடி முதல் பலநூறு அடிகள் வரை அமைதல் ஆகியன வெண்பாவின் இலக்கணங்களாகக் கொள்ளலாம். இவ்வெண்பா பலவகைப்படும்.

## முத்தொள்ளாயிரம்

பழந்தமிழ் இலக்கியங்களோடு ஒருங்கே வைத்து எண்ணப்படும் பெருமை உடைய நூல் முத்தொள்ளாயிரம் ஆகும். சேரன், சோழன், பாண்டியன் ஆகிய மூவேந்தர்களின் பெருமைகளை எடுத்துக்கூறும் இந்நூலில் இடம்பெறும் பாடல்கள் நூற்று எட்டாகும். மேலும் பழைய உரைகளில் கிடைக்கப்பெற்ற இருபத்து இரண்டு பாடல்களும் முத்தொள்ளாயிரப் பாடல்களாகப் பதிப்பிக்கப்பட்டுள்ளன. இப்பாக்கள் அனைத்தும் நேரிசை வெண்பா யாப்பு வகையில் அமைந்துள்ளன.

தாயர் அடைப்ப மகளிர் திறந்திடத்
தேயத் திரிந்த குடுமியவே – ஆய்மலர்
வண்டுலாஅங் கண்ணி வயமான்றேர்க் கோதையைக்
கண்டுலாஅம் வீதிக் கதவு (முத்தொள். 10)

நான்கடி உடையதாய், தனிச்சொல் இரண்டாம் அடியின் இறுதிச்சீராய் அமைந்து முதலிரண்டியும் ஒரு விகற்பமாயும் கடையிரண்டடியும் மற்றொரு விகற்பாகவும் ஒழுகிசைச் செப்பலோசைப் பெற்று இவ்வெண்பா அமைந்துள்ளது. முத்தொள்ளாயிர நூலில் அமைந்துள்ள அனைத்துப் பாடல்களும் நேரிசை வெண்பா யாப்பு வகையிலே அமைந்துள்ளன. ஒரே ஒரு பாடல் மட்டும் ஆறடிப் பாடல் அமைந்துள்ளது.

**வெண்பாவின் ஓசை**

வெண்பாவில் பயிலும் ஓசை செப்பலோசை ஆகும். இவ்வோசை ஏந்திசைச் செப்பலோசை, தூங்கிசைச் செப்பலோசை, ஒழுகிசைச் செப்பலோசை என மூன்று வகைப்படும். வெண்பாவில் வெண்சீர் வெண்டளை மட்டும் பயின்றால் அவ்வெண்பாவின் ஓசையை ஏந்திசைச் செப்பலோசை என்றும், இயற்சீர் வெண்டளை மட்டும் பயின்றால் அவ்வெண்பாவின் ஓசையைத் தூங்கிசைச் செப்பலோசை என்றும் இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் கலந்து பயின்றால் அவ்வெண்பாவின் ஓசையை ஒழுகிசைச் செப்பலோசை என்றும் கூறுவர். முத்தொள்ளாயிரம் நூலில் இடம்பெற்றுள்ள பாடல்கள் அனைத்தும் ஒழுகிசைச் செப்பலோசை உடையனவாகவே காணப்படுகின்றன.

> ‘திறந்திடுமின் தீயவை பிற்காண்டும் மாதர்
> இறந்து படிற்பெரிதாம் ஏதம் – உறந்தையர்கோன்
> தண்ணார மார்பிற் றமிழ்நர் பெருமானைக்
> கண்ணாரக் காணக் கதவு’ (முத்தொள். 47)

மேலே குறிப்பிட்ட நேரிசை அளவியல் வெண்பாவில் மொத்தம் பதினான்குத் தளைகள் இடம்பெற்றுள்ளன. வெண்சீர் வெண்டளை ஆறும், இயற்சீர் வெண்டளை எட்டும் வந்துள்ளன. தமிழ் இலக்கியத்தில் காணப்படுகின்ற வெண்பாக்கள் மிகப்பெரும்பாலும் ஒழுகிசைச் செப்பலோசை உடையனவாகவே காணப்படுகின்றன. ஒழுகிசைச் செப்பலோசை உடையனவாக வெண்பாக்கள் அமைவதே இயல்பானதாகும். படைப்பாளிகள் ஏந்திசைச் செப்பல் ஓசையிலோ தூங்கிசைச் செப்பல் ஓசையிலோ உருவாக்க வேண்டும் என்று நினைத்து

அதற்கேற்பச் சீர்களை அமைத்தால்தான் அவ்வோசைகளை உடைய வெண்பாக்களை உருவாக்க முடியும்.

### அளபெடை எதுகை பெற்ற பாடல்

அடியின் முதற்சீர் அளபெடை எதுகை பெற்ற பாடல் ஒன்றை முத்தொள்ளாயிரத்தில் காணமுடிகிறது.

‘முடித்தலை வெள்ளோட்டு மூளைநெய் யாகத்
தடித்த குடர்திரியா மாட்டி – எடுத்தெடுத்துப்
பேஎய் விளக்கயரும் பெற்றித்தே செம்பியன்
சேஎய் பொருத களம்’ (முத்தொள். 38)

மேலே சுட்டப்பெற்ற பாடலின் மூன்றாம் அடியின் முதற்சீரும் நான்காம் அடியின் முதற்சீரும் அளபெடை எதுகை பெற்று வந்துள்ளது.

### ஒரு விகற்ப இருவிகற்ப நேரிசை வெண்பாக்கள்

வெண்பா முழுவதும் ஒரே வகை எதுகையைப் பெற்று அமைந்திருந்தால் அவ்வெண்பாவை ஒருவிகற்ப நேரிசை வெண்பா என்றும் இரண்டிரண்டடிகளுக்கு ஒரு வகையான எதுகையைப் பெற்று அமைந்திருந்தால் அவ்வெண்பாவை இருவிகற்ப நேரிசை வெண்பா என்றும் வழங்குவது யாப்பியல் மரபாகும். முத்தொள்ளாயிரத்தில் இடம்பெற்றுள்ள பெரும்பாலான நேரிசை வெண்பாக்கள் இருவிகற்பம் உடையனவாகவே உள்ளன. ஒருவிகற்ப நேரிசை வெண்பாக்கள் ஒருசிலவே இடம்பெற்றுள்ளன.

**ஒருவிகற்ப நேரிசை வெண்பா**

வானிற்கு வையகம் வென்றது வானத்து
மீனிற் கனையார் மறமன்னர் – வானத்து
மீன்சேர் மதியனையான் விண்ணுயர் கொல்லியர்
கோன்சேரன் கோதையென பான்

இப்பாடலில் இடம்பெற்றுள்ள நான்கடிகளும் முதற்சீரில் ஒரே வகை எதுகையைப் பெற்றுவந்துள்ளன.

காவல் உழவர் களத்தகத்துப் போர் ஏறி
நாவலோஒ என்றிசைக்கும் நாளோதை – காவலன்தன்
கொல்யானை மேலிருந்து கூற்றிசைத்தாற் போலுமே
நல்யானைக் கோக்கிள்ளி நாடு (முத்தொள். 27)

இப்பாடலில் முதல் இரண்டு அடிகளும் ஒருவகையான எதுகையைப் பெற்றும் மற்ற இரண்டு அடிகளும் வேறொரு எதுகையைப் பெற்று அமைந்திருக்கிறது. எனவே இப்பாடல் இருவிகற்ப நேரிசை வெண்பா எனலாம்.

பெரும்பாலும் தமிழ் நீதி இலக்கிய யாப்பு வடிவமாக வெண்பா வடிவம் கருதப்பெற்று வருகிறது. வெண்பா வடிவம் அறம் சொல்லித்தான் பயன்பட்டது என்னும் கருத்தும் நிலவி வருகின்றது. பெரும்பாலான நீதி இலக்கியங்கள் வெண்பா யாப்பால் இயற்றப்பட்டவை. ஆனால், வெண்பா யாப்பென்பது அற இலக்கியங்களுக்கு மட்டுமே உரித்தான் வடிவமன்று. தமிழ் இலக்கிய மரபில் பல்வேறு பாடுபொருள்களான இலக்கியங்களும் வெண்பா யாப்பில்

உருவாகியுள்ளன. நேரிசை அளவியல் வெண்பாக்கள் பெரும்பாலும் வெண்சீர் வெண்டளையும் இயற்சீர் வெண்டளையும் கலந்து வருகின்ற ஒழுகிசைச் செப்பலோசை உடையனவாகவே காணப்படுகின்றன. நேரிசை அளவியல் வெண்பாக்கள் பெரும்பாலும் இருவிகற்ப நேரிசை வெண்பாக்களாகவே காணப்படுகின்றன. ஒருவிகற்ப நேரிசை வெண்பாக்கள் குறைந்த அளவே இடம்பெற்றுள்ளன.

## துணைநின்ற நூல்கள்


கந்தசாமி. சோ.ந. 1989. தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும். தஞ்சாவூர்: தமிழ்ப்பல்கலைக்கழகம்.

கதிர் முருகு (உரை). 2007. முத்தொள்ளாயிரம். சென்னை: சாரதா பதிப்பகம்.

சிவத்தம்பி கார்த்திக்கேசு. 2007. தமிழின் கவிதையியல். சென்னை: குமரன் புத்தக இல்லம்.

சிதம்பரநாதனார். அ. 2009. தமிழ் யாப்பியல் உயராய்வு. சென்னை: விழிகள் பதிப்பகம்.

பிச்சை. அ. 2011. சங்க இலக்கிய யாப்பியல். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

மணிகண்டன். ய. 2006. நேரிசை வெண்பா இலக்கியக் களஞ்சியம். சென்னை: பொன்னி பதிப்பகம்.